**<u>சார்பு நீதிமன்றம், துறையூர்.</u>**

**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

## <u>OS.No.27/2024</u>

தேதி: 16.04.2026

பெயர் : குமார் (பி.வா.சா.1) த/பெ: நடராஜன்

**<u>குறுக்குவிசாரணை</u>**

1. எனக்கு சொந்த ஊர் துறையூர் வைரிசெட்டிபாளையம் என்றால் சரிதான். வைரிசெட்டிபாளையத்தில் அம்பலக்காரத் தெருவில் வசித்து வருகிறேன். நான் துறையூர் வட்டம், கொல்லப்பட்டி கிராமத்தில் சொந்தமாக 15 வருடங்களாக டிராக்டர் வைத்து தொழில் செய்து வருகிறேன். வாதி ஊரான கெம்பியப்பட்டி கொல்லப்பட்டிக்கு பக்கத்து ஊர் என்றால் சரிதான். நான் டிராக்டர் தொழில் முன்னேற்றத்திற்காக வாதியிடமும் மற்ற நபர்களிடமும் கடன் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 தாவா புரோநோட்டில் உள்ள கையெழுத்து மற்றும் கைரேகை என்னுடையது என்றால் சரிதான். நான் கொல்லப்பட்டியிலிருந்து என் சொந்த ஊருக்கு கூலி வேலைக்காக சென்றுவிட்டேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்ட உறையில் உள்ள விலாசம் என்னுடையது தான் என்றால் சரிதான். வாதியிடம் நான் பணம் வாங்கியதற்காக வழக்கறிஞர் அறிவிப்பு வாதி அனுப்பியுள்ளார் என நான் தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம். நோட்டீஸ் அனுப்பப்பட்ட காலத்தில் நான் வாதியிடம் சென்று வாங்கிய பணத்தை திருப்பி செலுத்துவதாக கூறினேனா என்றால் இல்லை. நான் வாதியிடம் தாவா புரோநோட்டுக்காக ரூ.4,00,000/- கடன் வாங்கினேன் எனவும், அதற்காக தான் வா.சா.ஆ.1 புரோநோட் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. நான் ரூ.1,00,000/- தான் வாங்கினேன். நான் பதிலுரையில் கூறியுள்ளவாறு என்னுடைய ஆவணங்களை திருப்பி பெற எந்த சட்டப்படியான நடவடிக்கைகளையும்

எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் தாவாப்படி வாதிக்கு கடன் தொகையை திருப்பி செலுத்த வேண்டுமெனவும், தாவா வாதிக்கு ஆதரவாக தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

/ உண்மை நகல்/

(ஒம்/-C.விஜய்கார்த்திக்)
சார்பு நீதிபதி,
துறையூர்.